Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 357

திங்கட்கிழமை
18 நவம்பர் 2024

கார்த்திகை 03
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இந்தமுறை டாக்குத்தர்மாரும், லோயர்மாரும் தான் எங்கட எம்.பி.க்களில கூட இருக்கினம் கண்டியளோ"

# அநுரவின் அமைச்சரவை இன்று பதவியேற்பு!

கொழும்பு, நவம்பர் 18

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை இன்று நியமிக்கப்படவுள்ளது. 23 பேர் கொண்ட அமைச்சரவையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பெயரிடவுள்ளார்.

☞ 11

## ஆபத்தை உணர்ந்து ஒன்றிணையுங்கள்!

### மணிவண்ணன் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.18

தமிழ் தரப்புகள் ஒன்றிணைய வேண்டும் என்றும், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

☞ 11

## எம்.பிக்களுக்கு சலுகைகள்: 6 வாரத்துக்குள் தீர்மானம்

கொழும்பு, நவ.18

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய கொடுப்பனவுகள், சலுகைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் ஆறு வாரங்களுக்குள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகத்தின் சட்ட ஆலோசகர் விஜய பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள், முன்னாள்

☞ 11



## நாடாளுமன்ற குழுத்தலைவர் சிறீதரன்

யாழ்ப்பாணம், நவ.18

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சி.சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதே வேளை, பிரதம கொறடாவாக மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில்

☞ 11

## கொள்கை உரை நேரத்தில் மாற்றம்

கொழும்பு, நவ.18



10 ஆவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளநிலையில், முற்பகல் 11.30 மணிக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்க கொள்கை அறிக்கையைச் சமர்ப்பிப்பார் என்று நாடாளுமன்றத் தொடர்பாடல் குழு தெரிவித்துள்ளது.

☞ 11

## விடுமுறை இல்லை: வாக்களிக்கத் தவறிய ஒரு இலட்சம் பேர்

கொழும்பு, நவ.18

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுமார் ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் விடுமுறை இல்லாததால் வாக்களிக்கும் வாய்ப்பை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

☞ 11

## நிறைவேற்று அதிகாரம் நிச்சயம் ஒழிக்கப்படும்

### ரில்வின் சில்வா உறுதி

கொழும்பு, நவ.18

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்தபடி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே

☞ 11

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் சாவு

வவுனியா, நவ.18

வவுனியா, கள்ளிக்குளத்தில் 8 வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. க.டிலக்சன் (வயது-8) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

☞ 11

## பொது இடத்தில் வீசப்பட்ட மனித உடல் கழிவுகள்

### தாண்டிக்குளத்தில் பரபரப்பு

வவுனியா, நவ.18

பொது இடத்தில் மனித உடற் கழிவுகளை வீச முயன்ற நபரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று வவுனியா, தாண்டிக்குளம் பிரதேசத்தில் நடந்துள்ளது.

சைக்கிள் ஒன்றில் வந்த நபர் ஒருவர் தாண்டிக்குளம் பிரதேசத்தில் கழிவுப் பொதியுடன் வந்து அதை வீசிவிட்டுச் செல்ல முயன்றுள்ளார். மலர்ச்சாலை ஒன்றில் சடலங்களில் இருந்து அகற்றப்படும் கழிவுகளே அவை

☞ 11

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.18

காரைநகரில் கிணறொன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. இவர் கிணற்றில் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர், ஆலடி வீதியைச் சேர்ந்த பரமசிவம் சிவராஜா (வயது-38) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

### நடு வீதியில் அட்டகாசம்

## பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடிய இளைஞர்கள்

### சிக்கிய மோட்டார் சைக்கிள் பொலிஸாரிடம்

யாழ்ப்பாணம், நவ.18

வீதியில் முதியவர் ஒருவர் மீது தாக்குதல் நடத்த முயற்சித்து, அநாகரிகமான வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரின் வாகனத்தைக் கண்டதும், மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் நடந்துள்ளது. வீதியில் நின்றிருந்த

☞ 11

## தமிழரசின் தேசியப் பட்டியல் மருத்துவர் சத்தியலிங்கத்துக்கு

யாழ்ப்பாணம், நவ.18



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனம், கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. நேற்று வவுனியாவில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அரசியல் குழுக்

☞ 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. அங்கமின்றி புதிய நாடாளுமன்றம்

கொழும்பு, நவ.18
இலங்கையில் பிரதான பாரம்பரியக் கட்சியாகக் கருதப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இல்லாத சபையாக புதிய நாடாளுமன்றம் அமைய வுள்ளது.

இலங்கையில் 1947ஆம் ஆண்டு முதல் நாடாளு மன்றத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிநிதித்துவம் இருந்து வருகின்றது. 2020 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வி அடைந்தாலும் தேசியப் பட்டியல் ஊடாக அந்தக் கட்சிக்கு ஓர் ஆச னம் கிடைக்கப்பெற்றது.

இம்முறை பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட் டத்தில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைக் கப்பெற்றாலும் வெற்றிபெற்ற உறுப்பினர், ஐ.தே.க. அங்கத்துவம் பெற்றவர் அல்லர். அவர் மொட்டுக் கட்சி உறுப்பினர் ஆவார்.

சிலவேளைகளில் சிலிண்டர் கூட்டணிக்கு கிடைக்கப் பெற்ற இரு தேசியப் பட்டியல் ஆசனத்தில் ஒன்று ஐக்கிய தேசியக்கட்சிக்கு வழங்கப்பட்டால் இந்த நிலைமை மாறக்கூடும். எனினும், மக்கள் ஆணை மூலம் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் எவரும் தெரிவாகவில்லை. அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சியின் பெரும் புள்ளிகளும் தேர்தலில் தோல் வியடைந்தன. (ரி-44)

# வரலாற்று வெற்றியை அரசு துஷ்பிரயோகிக்கக்கூடாது



## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, நவ.18
**அதியுயர் அதிகாரத்தை பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தி அந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் என்று மக்கள் நம்பவில்லை. அந்தவகையில் இந்த நாடாளு மன்றம் முழு இலங்கையர்களினதும் நலன்களைப் பிரதி நிதித்துவப்படுத்துவதாக செயற்படவேண்டும்- இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
எனது காலத்தில், இவ்வாறானதொரு வரலாற்று வெற்றியை ஒரு கட்சி பெற்றுள்ளமை இதுவே முதன்முறையாகும். 1970இல் நாடாளுமன்றத்துக்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மை வழங்கப்பட்டது. 1977இல் ஆறில் ஐந்து பெரும் பான்மை வழங்கப்பட்டது. அதன் பின்னர் எந்தவொரு தனி கட்சியாலும் இவ்வாறானதொரு வெற்றியைப் பெற முடிய வில்லை. எனவே இந்த நாடாளுமன்றம் முழு இலங்கையர் களினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக செயற்படவேண்டும் - என்றார். (ச-இ)



# தேசியப்பட்டியல் ஆசனங்களின் விவரங்களை கையளியுங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு,நவ.18
2024 பொதுத் தேர்தலில், ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கப்பெற்றுள்ள தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி களுக்கான, குறித்த அரசியல் கட்சிக ளால் பரிந்துரைக்கப்படும் பெயர்ப்பட்டி யலை உடனடியாக தேர்தல் ஆணைக்கு முவக்கு பெற்றுத்தருமாறு அரசியல் கட்சி களின் பொதுச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


அதன்படி, அதிக ஆசனங்களைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி இன்று தனது கட்சி யின் தேசியப்பட்டியலை அறிவிக்க வுள்ளது.

மேலும் இந்த வருடம் ஐக்கிய மக்கள் சக் திக்கு தேசியப்பட்டியலிலிருந்து 5 நாடா ளுமன்ற உறுப்பினர் பதவிகள் கிடைத் துள்ள நிலையில், அதற்காக யாரை நிய மிப்பது என்பது தொடர்பில் கட்சி இன்னும் இறுதித் தீர்மானத்துக்கு வரவில்லை என வும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, புதிய ஜனநாயக முன்னணி 2 தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை கைப்பற்றியுள்ளதுடன், அந்தப் பதவிக ளுக்கு யாரை நியமிப்பது என்பது தொடர் பான கலந்துரையாடலும் இடம்பெறுகிறது.

அத்துடன், பொதுஜன பெரமுனவுக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பி னர் பதவி ஒன்று கிடைத்துள்ள நிலை யில், அதற்காக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக் சவை நியமிக்க கட்சி தீர்மானித்துள்ளது.

மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக் கும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் தலா ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவி கிடைத்துள்ள நிலையில், தமது தேசியப் பட்டியல் உறுப்பினர் யார் என் பதை இன்று இலங்கைத் தமிழரசுக்கட்சி அறிவிக்கவுள்ளதாக அந்தக் கட்சித் தக வல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# நாட்டை முன்னேற்றுவதற்கு சகலரும் முன்வரவேண்டும்



## இளங்குமரன் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.18
எமக்குக் கிடைத்த இந்த வெற்றி மக்க ளுக்குக் கிடைத்த வெற்றியாகும். புலம் பெயர் தேசத்தில் இருக்கின்ற உறவுகள் ஒன்றிணைந்து எமது நாட்டை முன்னேற் றுவதற்கு முன்வர வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் யாழ். - கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள் ளார்.

யாழ்ப்பாணம் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எமக்குக் கிடைத்த வெற்றி என்பது மக்களுக்குக் கிடைத்த பெரிய வெற்றியாகவே கருதப்படவேண்டும். ஏனென்றால் இதுவரை காலமும் இருந்த அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவும், பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாகவும், அரசு நிறுவனங்கள் வினைத்திறனாக இயங்காததன் காரண மாகவும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த நாட்டில் ஓர் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கையுடன் மக்கள் எமக்கு வாக்குகளை வழங்கியுள் ளனர். புதிய ஒரு யுகத்தைப் படைத்து, வளமான ஒரு சூழலை உருவாக்கி, தொழிற்றுறையை உருவாக்கி யாழ்.மாவட்டத்தை அபிவிருத்திசெய்து இளைஞர் களிடம் கையளிப்போம். இதற்கு புலம்பெயர் தேசத்தில் இருப்பவர்கள் உதவி செய்வதற்கு முன்வரவேண்டும்.

தொழிற்சாலைகளை நிறுவி, வடக்கு - கிழக்கில் தமிழ் மொழிக்கு முன்னிலை கொடுத்து, நாங்கள் ஓர் இன ஐக்கியத்துடன் நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும் - என்றார். (ச-ரி-27)

# யானையிலேயே இனிப் பயணம்



## ஐ.தே.க. முடிவு

கொழும்பு, நவ.18
எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களிலும் யானை சின்னத்தி லேயே போட்டியிட ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியல் வழிநடத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமை யில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தேர்தல்களில் 'யானை' சின்னத்தில் போட் டியிடுவது குறித்தும், எதிர்வரும் தேர்தல்களுக்கான கட்சியின் வியூகம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் பழமையான அரசியல் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக்கட்சியானது, தனது அடையாளத்துக்கும் வாக்காளர் அங்கீகாரத்துக்கும் மையமாக இருந்தது யானைச் சின்னமே. அந்தவகையில் கட்சியின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தவும், கட்சி முன்னோக்கிச் செல்லும் போது அதன் திசையை வலுப்படுத்தவும் 'யானை' சின்னத்தில் பயணிக்கும் முடிவு எடுக்கப்பட்டதாகக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரி வித்துள்ளார். (ச-இ)

# தேர்தல் வெற்றி பெருமகிழ்ச்சி!

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு,நவ.18
தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றி குறித்து பெருமகிழ்ச்சி அடைவதாக ஐக்கிய தேசியக் கட்சி யின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித் துள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வரலாற்று வெற் றியைப் பதிவு செய்துள்ளது.

கடந்த காலங்களில் ஆட்சி செய்த எந்தவொரு அரசாங்கத்தினாலும் வெற்றிகொள்ள முடியாத வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் வாக்குகளையும் இந்த அரசாங்கம் வென்றுள்ளது.

இலங்கையர்கள் என்ற ரீதியில் தேசிய மக்கள் சக்தி அடைந்த வெற்றி குறித்து மகிழ்ச்சி அடை கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சி, ஐ.ம.சக்தி ஒன்றிணையவேண்டும்

## ஆஷு மாரசிங்க வேண்டுகோள்

**கொழும்பு, நவ.18**

**சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு பகிரங்கமான அழைப்பை விடுப்பதாக அந்தக் கட்சியின் உறுப்பினரான ஆஷு மாரசிங்க பகிரங்கமான கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
பொதுத்தேர்தலின் பின்னரான சூழல்கள் உணரப்பட்டுள்ள நிலையில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிடத்தில் பகிரங்கமான கோரிக்கையொன்றை முன்வைக்கின்றேன். ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் மீண்டும் இணைந்து செயற்படவேண்டும். யானையை மீண்டும் பலப்படுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படுவது மிகவும் அவசியமானதொரு விடயமாகும். ஐக்கிய மக்கள் சக்தியை இணைப்பது தான் தற்போதுள்ள சவாலான விடயமாகும். அந்தச் சவாலை முகங்கொடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம் - என்றார். (ச-இ)

### கொக்குவிலில்

# ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ.18
யாழ்ப்பாணத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவன் கைதுசெய்யப்பட்டுள்ளான்.
பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கொக்குவில் பகுதியில் வைத்து குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டான்.
சந்தேகநபரின் உடைமையில் இருந்து 120 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது. (ச-20,26)

# ஆட்டைத் திருடிய சந்தேகநபர்கள் கைது

*யாழ்ப்பாணம், நவ.18*
மூளாய்ப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வீடு ஒன்றிலிருந்து ஆடு ஒன்றைத் திருடிச் சென்ற இருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தமது வீட்டில் கட்டிவைக்கப்பட்டிருந்த ஆடு ஒன்று களவாடப்பட்டுள்ளதாக ஆட்டின் உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்தார்.
விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டைப் பொலிஸார், மூளாய் தண்ணீர்த் தொட்டியடிப் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்கள் இருவரை கைதுசெய்தனர்.
சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ச-27)

உடனிருந்த அனைவருக்கும்
உள்ளார்ந்த நன்றிகள்...!

நடைபெற்று முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில், தங்கள் வாக்குகளால் எனக்கு ஆணை வழங்கிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

கடந்த 15 வருடகால அரசியற் பயணத்தில் என் ஆத்மபலமாகவும், அரசியற் பலமாகவும் தம் உடனிருப்பை வழங்கி, கொள்கையின்பாற்பட்ட பயணத்தின் பங்குதாரர்களாக இருந்த உங்கள் ஒவ்வொருவரது கரங்களையும் நன்றியோடு பற்றிக்கொள்கிறேன்.

என்னுள் நானாக இருந்து என்னை இயக்கும் எங்கள் தேசத்தில் விதையுண்ட ஆத்மாக்களின் அரூப பலத்தோடு, என் மக்களுக்கான தமிழ்த்தேசியப் பயணத்தை தடையற்றுத் தொடர்வேன்.

“நிலையிழக்க வைத்த அலைகளின் நடுவே தமிழ்த்தேசியக் கொள்கைக்கு கிடைத்த இந்த வெற்றி கார்த்திகையின் கனதியை உறுதி செய்யட்டும்”



என்றும் மக்கள் பணியில்,
சிவஞானம் சிறீதரன்

## பதினம் தெரியுமோ?

**இண்டைக்கு டக்கரும், சித்தரும் இந்தமுறை அநுர அலையில எப்பிடி கவிண்டவை எண்டுதான் பட்சி சொல்ல இருந்தது. ஆனா அதைவிட முக்கியமான விசயம் ஒண்டைச் சொல்லவேண்டி வந்திட்டுது. அதால டக்கர், சித்தர் விசயங்களை பிறகொருநாள் பாப்பம். அப்ப இண்டைக்கு எதைப் பட்சி சொல்லப்போகுது? வேறையென்ன, வழக்கம் போல வீட்டுக்கட்சியின்ர குழப்படிதான்.**

**நேற்று அந்தக் கட்சியின்ர அரசியல்குழுக்கூட்டம் வவுனியாவில நடந்தது. எலக்சன் முடிவுகளைப் பற்றியும், அந்தக் கட்சிக்கு கிடைச்சிருக்கிற தேசியப்பட்டியல் எம்.பி. பதவிக்கு ஆரைப்போடலாம் எண்டும் கதைச்சு முடிவெடுக்கத்தான் அந்தக் கூட்டம். அதுக்குள்ள எனக்குத்தான் அந்தத் தேசியப்பட்டியல் பதவியைத் தரோணும் எண்டு கனபேர் முந்தநாளே வேட்டியை மடிச்சுக் கட்டிக்கொண்டு வெளிக்கிட்டிட்டினம். அதுக்குள்ள தேர்தல் ஆணைக்குழு 'ஒவ்வொரு கட்சியும் தேசியப்பட்டியலில பேர் தந்த ஆக்களையும், தேர்தலில தோத்த ஆக்களையும் தவிர வேற ஆரையும் அந்தப் பதவிக்கு போடமுடியாது' எண்டு கொஞ்சம் கடுமையாவே சொல்லிப்போட்டுது. அதால தேசியப்பட்டியலில பேருள்ள தங்களுக்குத்தான் அந்தப் பதவி கிடைக்கும் எண்டு வீட்டுக்கட்சியைச் சேர்ந்த ஆக்கள் நம்பிக்கொண்டிருந்தவை. ஆனால் அவையின்ர கனவில அந்தக் கட்சியின்ர சத்தியமான பதில் செயலாளரும், அப்புக்காத்துவும் சேர்ந்து மண்ணள்ளிப் போட்டிருக்கினம்.**

**பொதுவா எலக்சனில போட்டியிடேக்க இந்தத் தேசியப் பட்டியலில போடுறதுக்கு தாங்கள் தெரிவுசெய்து வைச்சிருக்கிற ஆக்களின்ர விவரத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவிட்ட நேரில கொண்டுபோய்த்தான் குடுக்கவேணும். இல்லாட்டி அவை அதை ஏற்கமாட்டினம். இப்பிடித்தான் பொது வேட்பாளரா நிப்பாட்டின அரியத்தாரின்ர வரவு செலவு அறிக்கையை அவை ஈமெயிலில அனுப்பி, அது செல்லாது எண்டு சொன்னதால அடிச்சுப் பிடிச்சு ஓடிப்போய், இறுதித்திகதி முடிஞ்ச அடுத்த நாள்தான் அதை நேரில கொண்டுபோய்க் குடுத்தவை. எண்டாலும் அதை பிந்திக் கிடைச்ச கணக்கறிக்கை எண்டுதான் இண்டுவரைக்கும் தேர்தல் ஆணைக்குழு சொல்லிக்கொண்டிருக்கு. இப்பிடிப்பட்ட நிலையில, அனுபவமான ஆக்களை வைச்சிருக்கிற வீட்டுக்கட்சியின்ர சத்தியமான பதில்செயலாளர் தேசியப் பட்டியல் விவரத்தை ஈமெயிலில அனுப்பிப்போட்டு இருந்திட்டார். இப்ப அதை ஏற்கேலாது எண்டு தேர்தல் திணைக்களம் சொல்லிப் போட்டுது. ஏனெண்டால் அது நேர்ல கொண்டந்து ஒப்படைக்கவேண்டிய முக்கியமான ஆவணம். அதை ஈமெயிலில வேற ஆரும் அனுப்பலாமெல்லோ. அதாலதான் உரிய ஆக்களின்ர கையொப்பங்களோட அதை நேரில கொண்டுபோய் ஒப்படைச்சிருக்கோணும். ஆனால் வீட்டுக்கட்சி அப்பிடிச் செய்யேலை.**

**தவறுதலா அவை இப்பிடிச் செய்திருப்பினம் எண்டும் சொல்லேலாதே. எத்தினையோ தேர்தல்களைக் கண்ட கட்சிக்கு இந்தச் சின்ன விசயம் தெரியாதோ? தெரியும். அப்ப ஏன் அப்பிடிச் செய்தவை. அங்கதான் விசயம் இருக்கு. தேசியப் பட்டியல் விவரத்தை அனுப்பாட்டி, எலக்சனில நிண்டு தோத்த ஆக்களில ஓராளுக்குத்தான் அந்தப் பதவியைக் குடுக்கலாம். அதால தாங்கள் எலக்சனில தோத்தால் பின்வாசலால பார்லிமெண்டுக்கு போறதுக்காகத்தான், முதலே இப்பிடி பட்டியலை அனுப்பாமல் விட்டிருக்கினம். 'அப்புக்காத்துத்தான் ஈமெயில அனுப்பினால் காணும் எண்டு சொன்னவர். அதால தான் அப்பிடி அனுப்பினனான்' எண்டு சின்னப்பிள்ளையள் மாதிரி சத்தியம் கெட்ட பதில் செயலாளர் சொல்லுறாராம். அப்ப இப்பிடி பின்வாசலால போறதுக்கு ஆர் பிளான் பண்ணி அலுவல் பார்த்திருக்கிறார் எண்டது உங்களுக்கு விளங்குதோ?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் மிதக்கும் தட்டாதெருச் சந்தி வீதி!

## யாழ். மாநகரசபை பாராமுகம் பயணிகள் அவஸ்தை

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியிலுள்ள தட்டாதெருச் சந்திப் பகுதிகளில் அண்மையில் பெய்துவரும் மழை காரணமாக வெள்ளம் நிறைந்து காணப்படுகிறது. இதனால் அந்த வீதியூடாகப் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களுக்குள்ளாக நேரிடுகிறது என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

குறித்த வீதியை நாள்தோறும் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதியில் வெள்ளம் வடிந்தோட முடியாது நிறைந்து காணப்படுவதால் இந்த வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் பாடசாலை மாணவர்கள் , பாதசாரிகள் மீது வெள்ளநீரை அடித்து விட்டுச் செல்கின்றன. இதனால் பயணிகள் பெரும் அவஸ்தைக்குள்ளாக நேரிடுகிறது.

குறித்த வீதியருகே வாய்க்காலொன்று காணப்படும் போதிலும் அதில் பாதீனியச் செடிகள் அடர்ந்து வளர்ந்துள்ளன. அதன் காரணமாகவே வெள்ளநீர் வடிந்தோட முடியாது வீதியில் தேங்குகிறது.

இதுதொடர்பில் மாநகரசபையின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே பயணிகளின் நலன்கருதி உரிய அதிகாரிகள் வெள்ளம் வடிந்தோடுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்றனர்.

(ச)


### விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் தனிக்கடையொன்றும் யாழ் மின்சார நிலைய வீதியில் C.T.B. தரிப்பிடத்துக்கு பின்னால் தனிக்கடையும் கஸ்தூரியார் வீதியில் தனிக்கடையொன்றும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 723 2535

### வீடு வாடகைக்கு

அளவெட்டி மத்தியில் 3 அறைகள் இணைந்த குளியலறையுடன் வீடு வாடகைக்கு உள்ளது.

தொடர்பு: 076 441 4749


### வேலையாட்கள் தேவை

1) உணவு பரிமாறுபவர் (ஆண்/ பெண்)
2) காசாளர் (பெண்)
3) சமையலாளர் (ஆண்)
4) றொட்டி வேலை (ஆண்)
5) அனைத்து சிற்றுண்டிகள் தயாரிக்கத் தெரிந்தவர்
6) தேநீர் தயாரிப்பவர்

தொடர்பு:
076 423 6862 தங்குமிட வசதி உண்டு

(CS 29281) P-1


## மரண அறிவித்தல்



சேனாதிராஜா சண்முகநாதன் (சண்)

யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சேனாதிராஜா சண்முகநாதன் (சண்) அவர்கள் 15.11.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா மதியாபரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சாமினியின் அன்புக் கணவரும் டிலானி (லண்டன்), தர்சினி (அவுஸ்ரேலியா), திலிபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலன் (லண்டன்), சுரேஷ்குமார் (அவுஸ்ரேலியா), இளவேனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், கிருசாந், திவ்யா, அஸ்வின், அபிஷன், அருஷன், அக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தேவி, ஈஸ்வரி மற்றும் சத்தியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18.11.2024) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில் (East)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 29278) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
20.01.1945



மறைவு
17.11.2024

அப்புத்துரை மகேஸ்வரன்

ஏழாலை தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் அப்புத்துரை மகேஸ்வரன் நேற்று (17.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் கருணாவதி அவர்களின் அருமைக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம்-செல்லம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சிவனேஸ்வரி, சிவஞானசுந்தரம் மற்றும் திலகவதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அருந்தவநேசன் (ஓய்வு பெற்ற அதிபர்), நந்தகோபால், உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கௌரி (பாரதி முன்பள்ளி ஆசிரியர்), கிருஷானந்தன் (ஆனந்தன்) (மேற்பார்வையாளர் கைதடி முதியோர் இல்லம்), கண்ணதாசன் (இ.போ.ச-கிளிநொச்சி), கௌரிராஜன் (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கருணாகரன் (இ.போ.ச-கோண்டாவில்), ரஜீனா (சிரேஷ்ர தாதியர்-கைதடி முதியோர் இல்லம்), கிருஸ்னியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டிசாளினி, சரண்யா, அக்ஷயதா, தர்சன் ஆகியோரின் பேரனும் கனகபூசணி, சறோஜினிதேவி, கருணாகாந்தன், காலஞ்சென்ற கௌசலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (18.11.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

களவாவோடை,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 241 5139
076 095 6968
076 357 9899

## மரண அறிவித்தல்



திருமதி வீரசிங்கம் நாகரத்தினம் (ரத்தினம்)

வாதரவத்தை புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் நாகரத்தினம்(ரத்தினம்) அவர்கள் 17.11.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லாச்சி அவர்களின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை தங்கம்மா அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வீரசிங்கம் (அரசாங்க ஒப்பந்தகாரர்) அவர்களின் பாசமிகு மனைவியும், மல்லிகாமலர் (ஜேர்மனி), கணேசதாஸ் (ஜேர்மனி), லலிதா, சண்முகதாஸ் (உரிமையாளர், ஜெகிந்தன் ஸ்ரோர்ஸ்), உஷாநந்தினி, கோபாலதாஸ் ( கிராமசேவகர் - அச்சுவேலி தெற்கு) அவர்களின் பாசமிகு தாயாரும், யோகராஜா (ஜேர்மனி), சத்தியதேவி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (பிரதேச சபை உப அலுவலகம் - அச்சுவேலி), செந்தியா, லிங்கராஜா (பிரதேச சபை உப அலுவலகம் - அச்சுவேலி), குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு, செல்லையா, மற்றும் சிவகுரு, காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் பகவதி, தங்கவேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜேர்மனியில் வசிக்கும் கர்ணதாஸ், சிவதாஸ் (டிசான்), சுஜானா, யசோதரன், டயானி, கயந்தா, கோசலா, திஷா, மற்றும் அனிதா (பிரான்ஸ்) அஜிந்தாஸ் (பிரதேசசபை-புத்தூர்), அஜிந்தா, அபிரா, ஜெகிந்தாஸ் (கனடா), சாருமதி (கொழும்பு), ஜசிந்தாஸ், தஜிந்தாஸ் ( புகையிரத நிலைய அதிபர்- கொழும்பு கோட்டை), ஜெசிந்தாஸ் (ஆசிரியர்- இரத்தினபுரி), நிசாந்தாஸ் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), அஸ்வினி, சுஜானி (ஊவாவெல்லச பல்கலைக்கழகம்) மற்றும் அகிந்தாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வாதரவத்தையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 18.11.2024 திங்கட் கிழமை (இன்று) பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாதரவத்தை,
புத்தூர்

தகவல்:
குடும்பத்தினர

(CS 436) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சுயநலக்கூட்டா? பொதுநலக்கூட்டா?

தேர்தல்கள் முடிந்தவுடன் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும், அதன் ஆதரவாளர்களுக்கும் ஒரு சுடலைஞானம் பிறக்கும். கடந்த தேர்தல்களை விடவும் வாக்குகளின் எண்ணிக்கையும், ஆசனங்களும் குறைந்ததால், தாங்கள் பல கட்சிகளாகப் பிரிந்து நின்றதாலேயே இந்தநிலை என்றும், இனிமேல் அப்படியில்லாமல் ஓரணியாகத் திரண்டு நிற்பதற்கான நடவடிக்கை எடுப்போமெனவும் கட்சிக்காரர்கள் சொல்வார்கள். குடிகாரன் பேச்சுப் போல, இந்த அரசியல்வாதிகளின் ஒற்றுமைக் கோஷமும் சிலநாள்களிலேயே காணாமல் போய்விடும். பின்னர் பழையபடி ஒவ்வொருவரும் எப்படிக் கட்சியைப் பிரிக்கலாம், எதிர்த்தரப்பு அரசியல்வாதிக்கு என்னென்ன விதமாகச் சேறு பூசலாம், பதவிக்கதிரையைக் காலம்முழுதும் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்க என்னென்ன சுத்துமாத்துகள் செய்யலாம், அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் எவ்வளவு சம்பாதிக்கலாம் என்பதாகவே அடுத்த தேர்தல் வரையிலும் அவர்களின் 'மக்கள் பணி' மாறிவிடுகின்றது. அதன் பின்னர் தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் ஆசனப்பங்கீட்டுக்கான சண்டை தொடங்கிவிடும். ஏற்கனவே உடைந்திருந்த கட்சி இன்னும் பலவாகச் சிதறும். இப்படிச் சிதறிச் சிதறித்தான் இன்று தமிழ்த்தேசிய அரசியல் தெருவில் வந்து நிற்கின்றது. தமிழ்த் தேசியத்தை கட்சிப் பெயரிலும், பிரசாரத்திலும் மட்டுமே பயன்படுத்தும் கட்சிகள் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த அதிருப்தியே இம்முறை தேர்தலில் ஒரு தென்னிலங்கைக் கட்சி முதன்முறையாக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போனஸ் ஆசனங்களோடு வாக்குகளை அள்ள முடிந்திருக்கிறது. அதனால் மீண்டும் ஒற்றுமைக் கோஷங்களோடு கட்சிகளும், அமைப்புகளும் புறப்பட்டிருக்கின்றன.

தமிழ்த்தேசியக் கட்சிகள் முரண்பாடுகளைக் களைந்து, ஓரணியில் நிற்பது எப்போதுமே நல்லவிடயம் தான். ஆனால் அந்த ஒற்றுமை வெறுமனே வாக்கரசியலை மட்டுமே மையப்படுத்தியதாக இருக்கக்கூடாது. துரதிர்ஷ்டவசமாக இங்குள்ள கட்சிகள் எல்லாமே வாக்குகளை மனதில் வைத்துக்கொண்டும், தேர்தல் ஆதாயங்களைக் கணக்கிட்டுக்கொண்டுமே பிறகட்சிகளை கூட்டுக்கு அழைக்கின்றன. அந்த லாபநட்டக் கணக்கில் ஏற்ற இறக்கங்கள் வரும்போது இந்தச் சந்தர்ப்பவாதக் கூட்டுகள் பல்லிளித்துவிடுகின்றன. பிறகு, பழையகுருடி கதவைத் திறந்துவிட, திக்கொன்றாகக் கூட்டுக்குள் இருந்த கட்சிகள் பிரிந்தோடி, வேறோரு பெயரில் வேறு சில கட்சிகளோடு இன்னொரு கூட்டை உருவாக்குகின்றன. அப்படி புதிய கூட்டுகளும், புதிய கட்சிகளும் புற்றீசல்களாக பெருகியதன் விளைவாக, எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்ற குழப்பமும் மக்களிடம் உண்டாகின்றது. இந்தக் குழப்பத்தை இன்னும் அதிகரிக்கும் வகையில் 'நாங்கள் தான் சுத்தமான, உண்மையான தமிழ்த்தேசியவாதிகள்' என்று நடைபாதை வியாபாரிகள் போல கூவத்தொடங்கி விடுகின்றனர். ஆதாய நோக்கோடு தமிழ்த்தேசியக்கட்சிகள் செயற்பட்டதன் விளைவை சரியாகப் பயன்படுத்திக் கொண்டுவிட்டது தேசிய மக்கள் சக்தி. இனியும் பிரிந்து நின்றால் அரசியல்களத்தில் தாங்கள் காணாமல் போய்விடுவோம் என்ற அச்சத்தின் வெளிப்பாடாகவே தமிழ்க்கட்சிகள் மீண்டும் ஒற்றுமைக் கோஷத்தைக் கையில் எடுத்திருக்கின்றன.

ஏலவே குறிப்பிட்டதைப் போன்று தேர்தல் கால ஆதாயங்களை கணக்கிலெடுக்காமல், கொள்கைக்காக, மக்களுக்காக, இன விடுதலைக்காக, உரிமைக்காக கட்சிகள் ஒன்றுபட்டால் அது நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டிய விடயமே. ஆனால் கடந்த காலங்களில் ஒற்றுமைப்பட்டதாலேயே முரண்பட்டு பிளவடைந்த உதாரணங்களும் எம்மிடம் தாராளமாக உண்டு. குறிப்பாக அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை முன்னிறுத்திய பொதுக் கட்டமைப்பில் இணைந்தவர்கள் பின்னர் சங்குச் சின்னத்தோடு பிரிந்து சென்றதெல்லாம் துரோகத்தின் உச்சமே. இப்படி சுயநலக் கூட்டாக அல்லாமல் பொது நலக்கூட்டாக மக்களுக்காக இந்தத் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்தாலே இனிவரும் காலங்களிலாவது தமிழ்த்தேசிய அரசியலையும், எம்மினத்தின் அடையாளத்தையும் தக்கவைக்க முடியும்.




# மின்கட்டணத் திருத்தம் இன்று இறுதித் தீர்மானம்

கொழும்பு, நவ.18

மின்கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான தீர்மானம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடலில் எடுக்கப்படும் என மின்சாரசபைப் பேச்சாளர் பொறியியலாளர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இன்றைய கலந்துரையாடலில் எடுக்கப்படும் தீர்மானம் புதன் அல்லது வியாழக்கிழமை பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக மின்சாரசபை அறிவித்த கட்டணக் குறைப்பு போதாது எனவும் மின்கட்டணத்தை மேலும் குறைக்க முடியுமெனவும் மின்பாவனையாளர் சங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

மூன்று மாதங்களுக்கொருமுறை மின்கட்டணத்தை மீளாய்வு செய்யுமாறு பொதுச்சேவை ஆணைக்குழு மின்சாரசபைக்கு அறிவுறுத்தியுள்ளது. மின்பாவனையாளர்கள் கோரும் பட்சத்தில் அச்சிடப்பட்ட மின்பட்டியலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பொதுச் சேவை ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

30 யுனிற்றுக்குக் குறைவாக பாவிக்கும் பாவனையாளர்களுக்கு பெரும்பாலும் ஒரு யுனிற்றுக்கு 2 ரூபா குறைக்கப்படும் எனவும், 30-60 யுனிற் வரை பாவிப்பவர்களுக்கு ஒரு யுனிற்றுக்குரிய கட்டணம் 20 ரூபாயிலிருந்து 9 ரூபவாகக் குறைக்கப்படுமெனவும் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (எ-6)

## ஊழலுக்கு எதிராகப் புதிய சட்டங்கள்!



யாழ்ப்பாணம், நவ.18

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டாலும், புதிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இலங்கை வந்த அமெரிக்க போர்க்கப்பல்!

கொழும்பு,நவ.18

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான போர்க்கப்பலொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்தது. 155.2 மீற்றர் நீளம் கொண்ட, மொத்தம் 333 பணியாளர்களை கொண்ட போர்க்கப்பலே கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. நேற்று நாட்டை விட்டு கப்பல் புறப்பட்டுச் சென்றது. (ச-இ)

## உயர்தரப் பரீட்சை மேலதிக வகுப்புகள் நாளையுடன் தடை!

கொழும்பு,நவ.18

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பவற்றுக்கு நாளை 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல்தடை உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-22- 66)

## ஏலத்தில் திறைசேரி உண்டியல்கள்

ஒரு லட்சத்து 45,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, 91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 50 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான, 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 65 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளன. மேலும் 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ச-45- இ)

## நாளை

19.11.2024

செவ்வாய்க்கிழமை - கார்த்திகை - 04

சுபநேரம் : 10.39 - 12.09

ராகுகாலம் : 03.09 -04.39

## நாளொரு நல்வார்த்தை

"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில் ஓர் இலையின் அசைவில் இருக்கும்." - அல்பேட் சுவைற்சர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்திலிருந்து 8 பேர் நாடாளுமன்றுக்கு

கொழும்பு, நவ.18

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இருந்து ஏழு மலையகத் தமிழர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.


நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட கிஷ்னன் கலைச்செல்வி, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜீவன் தொண்டமான், ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட கிட்ணன் செல்வராஜ், அம்பிகா சாமுவேல் ஆகியோரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அதுபோன்று இரத்தினபுரி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட சுந்தரலிங்கம் பிரதீப், மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட சரோஜா போல்ராஜ் ஆகியோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர். இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசியப்பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள இராமலிங்கம் சந்திரசேகரனும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகினால் மொத்தமாக 8 மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இம்முறை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவர். (ச-45-இ)

# தமிழ்க்கட்சிகளின் இணைவு காலத்தின் தேவையாகும்!

## தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கம் வலியுறுத்து




யாழ்ப்பாணம், நவ. 18

**கடந்த எழுபது ஆண்டுகாலமாக அரசியல் உரிமைக்கான ஜனநாயக மற்றும் ஆயுதப் போராட்டங்களை எதிர்கொண்ட தமிழினம் பல்வேறு விதமான இழப்புகளையும், நெருக்கடிகளையும், வலிகளையும், வாழ்வியல் சுமைகளையும் எதிர்கொண்டு வருகிறது. எனவே தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம் எனத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.**


அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

2009க்கு பின்னர் கடந்த 15 ஆண்டுகளாகப் பல்வேறு நெருக்கடிக்குள் தமிழினம் சிக்கித் தவிக்கிறது. காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருபவர்கள் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பைத் தொடர்ச்சியாக வன் வலு கடந்த மென் வலுவில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அதை எதிர்கொள்வது சவாலாக உள்ளது.

தற்போது தமிழ்க்கட்சிகளின் பதவிச் சண்டையால் தங்களுக்குள் முரண்பட்டு பல அணிகளாகப் பிரிவடைந்துள்ளனர். தமக்குள்ளான முரண்பாடு பொது எதிரியை மகிழ்விக்கும். இந்தத் தேர்தல் களம் தமிழ்க்கட்சிகளின் முரண்பாட்டையே பேசுபொருளாக்கியது.

இதனால் வெறுப்படைந்த பொதுமக்கள் தமிழ்த் தேசியக் கோட்பாட்டுச் சித்தாந்தத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

நடந்து முடிந்த தேர்தல் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய நீக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு தார்மீகப் பொறுப்பெடுக்க வேண்டியது சகல தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஆகும். தமிழ்க் கட்சிகளிலும் பல்வேறு விதமான தவறுகளும், குறைபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றை அவர்கள் விரைவில் தீர்த்துக் கொள்ளவேண்டும். தமிழ்த்தேசியக் கட்சிகள் தமக்குள் இருக்கின்ற பகைமையை மறந்து குறைந்தபட்சம் ஒன்றாக இணைந்து மீண்டும் கூட்டமைப்பாக இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் நிர்ப்பந்தமும் ஆகும். இவ்வாறான ஐக்கியமில்லாவிட்டால் அசுர பலத்தோடு வெற்றிபெற்றுள்ள அரசை எதிர்கொள்ளக் கூடிய வலிமை தமிழர் தரப்பிடம் இல்லாமல் போய் விடும் என்றுள்ளது. (ச-25, 56)



# வாக்குறுதிகளை ஜனாதிபதி நிறைவேற்றுவது அவசியம்!

## பொன் சுதன் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், நவ.18

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய வாக்குறுதிகள் உண்மை என்றால் மாவீரர் நாளுக்கு முன்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என** யாழ். மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்ட பொன் சுதன் தெரிவித்துள்ளார். வடமராட்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

போரினால் தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்மார்கள் கூட உங்களது வாக்குறுதிகளை நம்பி வரலாற்றில் என்றுமில்லாதவாறு உங்களுக்கு வாக்களித்துள்ளார்கள். இது நீங்கள் வழங்கிய நம்பிக்கையின் அடிப்படையிலாகும். எனவே, அந்த வாக்குறுதிகள் உண்மை என்றால் முதற்கட்டமாகப் போரில் உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் வகையில் நல் எண்ணத்தை காண்பிக்கவேண்டும். உண்மையான நல்லிணக்கம், சமாதானம் ஆகிய வற்றை ஏற்படுத்துவதற்கு தமிழ் அல்லது முஸ்லிம் ஒருவரை நாட்டின் பிரதமராக நியமிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-ரி-27)

# கார்முகில்கள் சூழ்ந்தாலும் பயணம் என்றும் ஓயாது

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.18

தேர்தல் முடிவுகளை சவாலாக ஏற்று முன்னோக்கிச் செல்வோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர்களுக்கு செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் ஈ.பி.டி.பி. கட்சியின் அடுத்த கட்ட நகர்வுக்கு சிறந்த வலுவூட்டலைத் தந்துள்ளது.

தேசிய நல்லிணக்கம் குறித்த தெளிவூட்டல் மக்களுக்கு சரிவர வழங்கப்படாமையும், எமது கட்சிக்கு எதிராக திட்டமிட்டு பரப்பட்ட அவதூறுகளுமே பின்னடைவுக்குக் காரணம்.

தேர்தலுக்கு முன்னர் ஈ.பி.டி.பி. க்கு எதிராக முனனெடுக்கப்பட்ட பிரசாரங்களுக்கு அப்பால், தேர்தலுக்குப் பின்னரும் வெளியாகின்ற காழ்ப்புணர்வு மற்றும் போலிப் பிரசாரங்கள் குறித்த உண்மைகளைத் தெளிபடுத்த வேண்டிய கட்டாய கடமை கட்சிக்கு உண்டு.

மனவலிமையோடு எமக்கு வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்க நினைத்திருந்த மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அலைகள் அடித்தாலும், கார்முகில்கள் சூழ்ந்தாலும் எமது கடும் பயணம் ஒரு போதும் நிற்பதில்லை. எந்தப் பின்னடைவுகளும் ஓரடி பின்னால் ஈரடி முன்னால் இருக்கும்- என்றார். (ச- 27)

# அரசியலிலிருந்து ஓய்வுபெறுகிறார் மஹிந்தானந்த



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். நாவலப்பிட்டி மஹிந்தானந்த அளுத்கம அறக்கட்டளை அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தனது சேவை கண்டி மாவட்ட மக்களுக்கு தேவையில்லை என்பதை பொதுத்தேர்தல் நிரூபித்ததன் காரணமாக அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# 66 கடவுச்சீட்டுகளுடன் இருவர் கைது

கொழும்பு,நவ.18

கஹதுடுவ, சியம்பலாகொட் பிரதேசத்தில் 66 கடவுச் சீட்டுகளை வைத்திருந்த பெண் ஒருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கஹதுடுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபரான பெண் சிங்கப்பூர், ஹொங்கொங், டுபாய் மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளில் பணியாற்றிய பின்னர், கடந்த 2022 ஆம் ஆண்டு இந்த நாட்டுக்கு வருகைதந்து வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர்கள் தங்கியிருந்த வீட்டைச் சோதனையிட்டபோது, 20 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா - உக்ரைன் போரை ட்ரம்ப் முடிவுறுத்துவார்


கீவ், நவ.18

**நீண்டகாலமாக நீடித்துவரும் ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை அமெரிக்கத் தேர்தலில் வெற்றியீட்டிய டொனால்ட் ட்ரம்ப் முடிவுக்கு கொண்டுவருவார் என்று உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுமார் இரண்டு வருடங்களுக்கும் மேலாக ரஷ்யா- உக்ரைன் போர் இடம்பெற்று வருகின்றது. அமைதிப் பேச்சுகள் பல நடத்தியும் போர் நின்றபாடில்லை.

அமெரிக்கா, ஜேர்மன் போன்ற நாடுகளிடம் தொடர்ந்தும் உக்ரைன் உதவிகளைக் கேட்டுவருகிறது. இந்த நிலையில் அண்மையில் நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றியடைந்துள்ளார். எங்களது நிலை குறித்து ட்ரம்ப் கேட்டறிந்துகொண்டார். ட்ரம்பின் தலைமையின் கீழ் நிச்சயம் இந்தப் போர் முடிவுக்கு வரும் - என்றார். (ச-இ)



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜோ பைடன் இருவரும் வெள்ளை மாளிகையில் சந்தித்துள்ளனர் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. இந்தச் சந்திப்பு வெள்ளைமாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் நடந்ததுடன் ஜோ பைடன், ட்ரம்புக்கு விருந்து அளித்தும் கௌரவித்துள்ளார். (ச-இ)




## 'மிஸ் யுனிவர்ஸ்' -2024 டென்மார்க் அழகி தெரிவு

டென்மார்க், நவ.18

'மிஸ் யுனிவர்ஸ் - 2024' பட்டத்தை முதன்முறையாக டென்மார்க்கைச் சேர்ந்த 21 வயதான விக்டோரியா கிஜேர் கைப்பற்றியுள்ளார்.

இதன்மூலம் பிரபஞ்ச அழகிப் பட்டத்தை வென்ற முதல் டென்மார்க் பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றார். 2023 ஆண்டு பிரபஞ்ச அழகிப் பட்டம் வென்ற நிகரகுவா நாட்டைச் சேர்ந்த ஷெய்னிஸ் பலாசியோஸ், விக்டோரியாவுக்கு பிரபஞ்ச அழகிப் பட்டத்தை சூட்டினார். மேலும் நைஜீரியாவின் சினிடிம்மா, அடெட்ஷினா ஆகியோர் இரண்டாவது இடத்தையும் பிடித்தனர். (ச-இ)

## நெத்தன்யாகு வீட்டின்மீது வெடிகுண்டுத் தாக்குதல்

டெல்அவிவ், நவ.18

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் வீட்டின் மீது மீண்டும் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு இஸ்ரேலில் உள்ள செசரியா நகரில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் வீட்டை நோக்கி நேற்றுமுன்தினம் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக, இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் தெரிவித்தார்.

இருப்பினும், இந்தத் தாக்குதலின்போது, சம்பவ இடத்தில் பிரதமரோ அவரது குடும்பத்தினரோ யாரும் இல்லாத காரணத்தால், உயிரிழப்புகள் ஏற்படவில்லையென மேலும் அவர் தெரிவித்துள்ளார். சுமார் ஒரு மாதத்துக்கு முன்னதாகவும், பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் அலுவலகம் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சீனாவில் கத்திக்குத்து 8 பேர் பரிதாப பலி

பீஜிங், நவ.18

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் கல்வி நிறுவனமொன்றில் இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 17 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அந்தக் கல்வி நிறுவனத்தில் படிக்கும் 21 வயதுடையவராலேயே சரமாரியாக கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பரீட்சையில் தோல்வியடைந்த பட்டதாரிகளுக்கான சான்றிதழைப் பெறாத மாணவர் ஒருவரே கத்திக்குத்தில் ஈடுபட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## மிகப்பெரிய பவளப்பாறை கண்டுபிடிப்பு

பீஜிங், நவ.18

உலகின் மிகப்பெரிய பவளப் பாறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பசுபிக் கடலின் தென்கிழக்கே சாலமன் தீவுக்கூட்டம் அருகே இந்த பவளப்பாறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

34 மீற்றர் அகலம், 32 மீற்றர் நீளம், 5.5 மீற்றர் உயரம் கொண்ட இந்தப் பவளப்பாறை உலகிலேயே மிகப்பெரிய பவளப்பாறை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பவளப்பாறை 300 முதல் 500 ஆண்டுகள் பழமையானது என்றும், வானில் இருந்து பார்க்கும்போதும் பவளப்பாறை தெரியும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)



## ஹிஜாப் தவிர்ப்புக்கு மனநல சிகிச்சைகள்

தெஹ்ரான், நவ.18

ஈரானில் ஹிஜாப் அணிய மறுக்கும் பெண்களுக்கு மனநல சிகிச்சைகளை வழங்குவதற்கு அந்நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது.


மத்திய கிழக்கில் உள்ள பிரதான இஸ்லாமிய நாடுகளுள் ஒன்றான ஈரானில் குடியரசு ஆட்சி முறை இருந்தாலும் இஸ்லாமிய சட்டங்களின் படியே ஆட்சி நடந்து வருகிறது.

பொது இடத்தில் பெண்கள் ஹிஜாப் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும் என்ற விதி உள்ளது. ஆனால் சமீப [illegible] இதுபோன்ற [illegible] எதிர்ப்புக் குரல்கள் எழுந்து வருகின்றன.

எனவே ஹிஜாப் அணிய மறுக்கும் பெண்களுக்கு மனநோய் இருப்பதாக கருதப்பட்டு அவர்களின் மனநிலையைச் சரிசெய்ய 'மனநல சிகிச்சை மையம்' அமைக்கப்பட உள்ளதாக ஈரான் அரசு அறிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 10 . 1959

மறைவு 10 . 12 . 2022

## கார்த்திகேசு அம்பிகாபதி

(வெற்றிலையூர், சவூதி அரேபியா TASECO - TMSS.A.LTD Driver, முன்னாள் முகாமையாளர் Everyday குடிநீர் விநியோகம்)

அப்பா ஆண்டுகள் இரண்டு ஆனதோ
ஆறவில்லை எங்கள் துயரம்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொற்பேசி அறிவுரைகள் பல கூறி
எங்களுடன் வாழ்ந்த அப்பாவை
நாம் என்றென்றும் நினைந்திருப்போம்.

பழையகண்டி,
காரைநகர்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

(CS/56686) J-1

---

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

### பதவி வெற்றிடம்

01. பதவி - கிராமிய வங்கி எழுதுநர் (01)

குறியீட்டு இல - 300/12(02/2022 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 18820 - 170x10 - 185x10-22370
பால் - ஆண்/ பெண்

**தகைமைகள் :- (01/2021 இன் படி)**

அ(i) கூட்டுறவு ஊழியர் 13 வது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 02 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் எழுதுநர் பதவியில் 04 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ii) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப் பக்க உருவாக்குநர் பதவியில் 04 வருட அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப்பக்க உருவாக்குனர் பதவியில் 04 வருட அனுபவம்.

**அல்லது**

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாட சித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 03 மாதங்களிற்கு குறையாத Ms Office கற்கை நெறி/ அதனை ஒத்த கணனி கற்கை நெறியினைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) பிரிவு அல்லது (ஆ) பிரிவு தகைமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியியல் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுதடதப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக் களற்றதும் விண்ணப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி - 05.12.2024**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப் பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கிராமிய வங்கி முகாமையாளர் (300/12) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு 05.12.2024 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள தலைவர்**
**திரு.சி. சுதர்சன்**

ப. தெ. வ. அபி. கூட். சங்கம்
டச்சு வீதி, சாவகச்சேரி.
18.11.2024

(CR/43718) J-1

---

தேர்தல் கடமையில் உயிரிழந்த

## பொலிஸின் வீடு சென்று மாவட்டச் செயலர் ஆறுதல்

யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலரும் தெரிவித்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தேர்தல் கடமையின்போது உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டுக்குச் சென்று துக்கத்தில் பங்கெடுத்தார்.

வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த சுபாஷ் என்கின்ற குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் தேர்தல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை திடீரென உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27)

---

# கண்ணீர் அஞ்சலி



சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முன்னாள் பொருளாளராக (1993 - 1998) கடமையாற்றிய

தமிழ்ப் பேராசான்

**நாகலிங்கம் குழந்தைவேல்**


அவர்களின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்
இல்லப் பிள்ளைகள், பணியாளர்கள்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

---

# ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பு



கடந்த (19.10.2024) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## தியாகராஜா புஸ்பநாதன்

தோற்றம் 26.06.1944 மறைவு 19.10.2024

அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (18.11.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 39/4, வைரவர் ஒழுங்கை,
சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/56688) J-1

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



தோற்றம் 16 . 09 . 1966

மறைவு 19 . 10 . 2024

கடந்த (19.10.2024) சனிக்கிழமை அன்று
சிவப்பேறு எய்திய

## அமரர் டாக்டர் துரைசிங்கம் குலசிங்கம்

(ஓய்வு பெற்ற லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (18.11.2024) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலி, தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், தகுந்த தருணத்தில் சிரமம் பாராது உதவி புரிந்தோருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

பண்டகை வீதி,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்
077 875 9622

(CS/28741) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய ஜனநாயக முன்னணியில் தேசியப்பட்டியலூடாக இருவர்!

கொழும்பு, நவ. 18

புதிய ஜனநாயக முன்னணிக் கட்சி சார்பாக போட்டியிட்ட முன்னாள் பிரதமர் தினேஸ் குணவர்த்தன மற்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குள் நுழையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நியமிப்பது தொடர்பில் உள்ளகப் பேச்சு இடம்பெற்று வருவதாகவும் கூறப்படு கிறது. புதிய ஜனநாயக முன்னணி சார்பில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில், தெரிவுசெய்யப்பட்ட 3 நாடாளுமன்ற உறுப்பினர்களோடு மொத்தமாக 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் (இரண்டு பேர் தேசிய பட்டியலிலிருந்து) நாடாளுமன்றைப்பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர். (ச-25,சி)

# எம்.பி.யாகும் திலித் ஜயவீர

கொழும்பு, நவ.18

சர்வஜன அதிகாரம் கட்சியின் தேசியப்பட்டியல் ஆசனத்துக்கான பிரதிநிதியாக அதன் தலைவர் திலித் ஜயவீரவை நியமிக்கத் தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் எந்த ஆசனத்தையும் பெறத் தவறிய போதிலும், கட்சி ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது. குடும்பத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**இடபம்:** அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். காலையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவி னர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையக் கூடும். கணவன் மனைவிக் கிடையே சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டாலும் உடனே சரியாகிவிடும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சி எதிலும் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் குடும்பத்தினருடன் உறவினர் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயல்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற சற்று அலையவேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைக ளால் பெருமை உண்டாகும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எதுவும் இன்று எடுக்க வேண்டாம்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவு கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** இன்று அனைத்து விஷயங்களிலும் பொறுமை மிகவும் அவசியம். கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லவும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ் நிலை ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.18

யாழ். கரவெட்டி திரு இருதய கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி அதிபர் கதிர்காமத்தம்பி சிறிஸ்குமார் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சந்திரா தொழிற்சாலையின் நிறுவனப் பணிப்பாளர் தவரட்ணராசா ஜோன் ஜெயந்தன், சிறப்பு விருந்தினராக அறிவுப் பங்காளிகள் கொழும்பு நிறுவன தகவல் ஆய்வு அதிகாரி திருமதி புளோறா லக்சினி ஜோன் ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45.27)





# ஹாட்லியின் மைந்தர்களது நினைவேந்தல் உணர்வுபூர்வம்

யாழ்ப்பாணம்,நவ.18

ஹாட்லியின் மைந்தர்களது 25 ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் நேற்று ஞாயிற்றுக் கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது உயிரிழந்த மாணவர்களது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஹாட்லிக் கல்லூரி அதிபர் த. கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் ஹாட்லியின் மைந்தர்கள் நினைவாக குருதிக்கொடை முகாம் இடம்பெற்றது. ஹாட்லிக் கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நால்வர் கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-100)

# டெங்குப் பரவலை தடுப்பதற்கு கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.18

டெங்கு நோய்ப் பரவலை தடுத்தல் தொடர்பான கூட்டம் வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் பகீரதன் தலைமையில் உரும்பிராய் தெற்கு யோகபுரம் அண்ணா சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் வடமாகாண சுகாதார திணைக்களப் பணிப்பாளர் கேதீஸ்வரன் நோய் தொடர்பில் விளக்கமளித்தார். (ச-45-10)





# மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

விசுவமடு, நவ.18

விசுவமடு ஏற்பாட்டுக் குழுவினர் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு பிரமந்தனாறு வட்டாரத்துக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது மாவீரர்களின் நினைவாக மரக்கன்று வழங்கிவைக்கப்பட்டது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பிரதாய எதிர்க்கட்சியாக செயற்படத் தயார் இல்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, நவ.18

ஐக்கிய மக்கள் சக்தி சம்பிரதாய எதிர்க் கட்சியாகச் செயற்படத் தயாரில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்கிறோம். இந்தத் தேர்தலில் சுமார் 60 சதவீத வாக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 30 சதவீதம் பேர் வாக்களிக்கவில்லை. நிராகரிக்கப்பட்ட வாக்குகள் ஏராளம். இந்த காரணிகளைத் தவிர்த்து நோக்க முடியாது. அளிக்கப்பட்ட வாக்குகளின் மூலமே தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டு பொதுத் தேர்தல் வரலாற்றில் அதிக மக்கள் வாக்களிக்காத தேர்தலாக மாறியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி சம்பிரதாய எதிர்க்கட்சியாக செயல்பட தயாராக இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி சம்பிரதாய அரசியலுக்கு சவால் விடுத்த ஒரு அரசியல் இயக்கமாகும். ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் குறைபாடுகள் நிகழ்ந்தன. அந்த குறைபாடுகளை ஆய்வு செய்து வருகிறோம். தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை விட தேசிய மக்கள் சக்தி சிறப்பாக தங்களை தகவமைத்துக் கொண்டது.

நாட்டு மக்கள் கடும் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டும். உலகில் வெற்றி பெற்ற நாடுகள் பயணித்த பாதையில் அரசு செல்கிறதா அல்லது தோல்வி கண்ட நாடுகள் பயணித்த பாதையில் அரசு செல்கிறதா என்பதை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். நல்ல காரியங்களைச் செய்யும்போது, அரசாங்கத்துக்கு எமது பூரண ஆதரவை நல்குவோம்.

நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கு அர்ப்பணிப்புள்ள கட்சியாக, ஐக்கிய மக்கள் சக்தியினரான நாம் எமது பொறுப்பை நிறைவேற்றி வருகிறோம். ஊழல் மற்றும் மோசடிகளை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவளிப்போம். ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக நாங்கள் பணியாற்றுவோம். நாட்டு மக்களுக்கு அரசாங்கம் செய்யும் நல்ல காரியங்களுக்கு நாம் நல்ல பதிலை வழங்குவோம். ஏனைய சந்தர்ப்பங்களில் விமர்சனங்களை முன்வைக்கவும் நாம் தயங்கமாட்டோம் - என்றார்.

(ஏ-இ)


## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

மேலும்

1) விற்பனையாளர் (ஆண், பெண்)
2) பில் கிளாக் (பெண்) 18-25
3) காசாளர் (பெண்) 18-25
4) பைக்கிங் செய்பவர் (பெண்) 18-25

குறிப்பு :(யாழ் நகரில் இருந்து 10 Km உள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்)

தொடர்புக்கு : 077 748 8093


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் தற்காலிக ஆசிரியை
திருமதி சு.தாரணி
அவர்களின் அன்புக் கணவர்
அமரர் தங்கராஜா சுபாஷ்
அவர்கள் கடந்த 14.11.2024 வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

(CS/56895) J-1


## மணமகள் தேவை

1. முல்லைத்தீவு, இந்து குருகுலம், 1994, அத்தம் MSc மணமகனுக்கு மணமகள் தேவை. - 47011
2. தெல்லிப்பளை - பருத்தித்துறை, இந்து, குருகுலம், 1996, சித்திரை, Post graduate in Managment , Newzeland மணமகனுக்கு மணமகள் தேவை. - 36133
3. அராலி இந்து குருகுலம் 1990, பூசம், BSc, Goverment Servant மணமகனுக்கு மணமகள் தேவை. - 31900
4. K.K.S - மாவிட்டபுரம், இந்து, கௌரவகுலம் (K), 1988, ரோகிணி, MSc, France மணமகனுக்கு மணமகள் தேவை. - 46157
5. சங்கானை, இந்து, கௌரவகுலம் (K), 1992, விசாகம், BA (Hons), Germany + UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. - 34210
6. சுன்னாகம், சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம் (K), 1996, மிருகசீரிடம், BSc Engineering, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. - 32933
7. யாழ்ப்பாணம், இந்து, விஸ்வகுலம், 1988, சுவாதி, Quantity Surveyor, UK மணமகனுக்கு மணமகள் தேவை. - 33913
8. நல்லூர், இந்து, விஸ்வகுலம், 1987, அத்தம், BA (Hons) FIPA, FFA, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. - 32042
9. வறணி - சாவகச்சேரி, இந்து, விஸ்வகுலம், 1988, மகம், BBA, ACCA மணமகனுக்கு மணமகள் தேவை. - 2991

எம்மிடம் எல்லா ஜாதியிலும், Unmarried, Divorce மணமகன்களும், மணமகள்களும் உண்டு.

S.Sharma J.P, போன் - 077 539 3228
www.thaalee.com Whats app - 077 803 8193


## மரண அறிவித்தல்

### அமரர் வெற்றிவேலு தர்மகுலசிங்கம் (தவம்)

788 சிற்றூர்தி சங்க முன்னாள் தலைவரும் 29-6721 மினிபஸ் உரிமையாளரும்

தோற்றம்
22 . 03 . 1955



மறைவு
17 . 11 . 2024

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு தர்மகுலசிங்கம் 17.11.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கம்மா அவர்களின் அன்பு மருமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் தர்சன், கபிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சஜிதா, வைஷ்ணவி ஆகியோரின் மாமனாரும் அமரர் விஜயகுலசிங்கம், குமார் (சுவிஸ்) புஸ்பகலா ஆகியோரின் சகோதரரும், முருகையாவின் மைத்துனரும் சியான், சச்சின், சுரக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2024) திங்கட்கிழமை காலையில் நடைபெற்று மு.ப. 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திகு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 645 2479

(CS 29280) V-1

## மரண அறிவித்தல்



### Dr. சின்னத்தம்பி பேரின்பநாயகம் (துரை அண்ணா)

(Retired Registered Medical Officer, Former President Of Chunnakam Lion's Club)

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் 516, K.K.S வீதியை வசிப்பிடமாகவும் 206/4, பிறவுண் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பேரின்பநாயகம் 16-11-2024 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சுப்பையா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் (Retired Pharmacist, Jaffna Teaching Hospital) அன்புக் கணவரும் ஜெயநந்தினி (லண்டன்), பிரியதர்சினி (ஆசிரியை-யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ரஜீவ் (சிவபூமி பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகரன் (லண்டன்), வாகீசன் (ஆசிரியர்-யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜிகன், துஹிலன், மேகவன், லதுஷியன், மகிபா ஆகியோரின் அன்புப் பேரனும், காலம்சென்றவர்களான மனோன்மணி (Teacher), சரஸ்வதி அம்மா (Retired Pharmacist), பாலசுப்பிரமணியம் (Teacher) மற்றும் பரம்சோதி அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் (A.O.J. Kacheri), தியாகராஜா (Rtd Surveyor) மற்றும் கதிர்காமத்தம்பி (Rtd Engineer, Canada), பத்மநாதன் (Vetenery Surgen, Canada), காலஞ்சென்ற பரமேஸ்வரி (Life Stock Development) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2024) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

206/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 378 7294

(CS 29274) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்று...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- 21 ஆம் திகதி புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வுக்கு முன்னதாக பதவிப்பிரமாணம் செய்து கொள்ள வேண்டிய புதிய அரசாங்கம், சட்டமியற்றும் சபைக்கு அதிக அதிகாரம் வழங்கும் வெஸ்ட்மினிஸ்டர் பாணி ஜனநாயகத்துக்கு நாட்டை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
நாங்கள் அந்நிய முதலீடுகளை வரவேற்கிறோம், யாரும் வந்து தாராளமாக முதலீடு செய்யலாம். கடந்த காலங்களைப் போல் அந்நிய முதலீட்டாளர்கள் கமிஷன் வழங்கத் தேவையில்லை - என்றார். (அ-எ-6)

## விடுமுறை...

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க கிட்டத்தட்ட ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் விடுமுறை எடுக்க முடியாதிருந்தனர் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் மதிப்பிடுகின்றனர்.
இந்த விடயம் தொடர்பில் 12 நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## அநுரவின்...

புதிய அமைச்சரவை முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவியேற்கும் என்று கூறப்படுகின்றது.
புதிய அரசாங்கத்தின் பிரதமராக ஹரிணி அமரசூரியவும், விஜித ஹேரத் வெளிவிவகார அமைச்சராகவும் மீண்டும் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர். நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் வசம் இருக்கும்.
தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான சரோஜா போல்ராஜ் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படுவார் என்று தெரியவருகின்றது.
சபாநாயகராக பிமல் ரத்நாயக்க நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தாலும், அவருக்கு சபை முதல்வர் பதவி வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
சபாநாயகர் பதவி சிறுபான்மையைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை - எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள புதிய நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வுக்கு முன்னதாகப் புதிய அமைச்சரவையின் முதல் கூட்டத்தை நாளை செவ்வாய்க்கிழமை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-44)

## கொள்கை...

10ஆவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு நவம்பர் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன், அன்று முற்பகல் 11.30 மணியளவில் ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை சமர்ப்பிப்பார். பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை சமர்ப்பிப்பார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.
அரசமைப்பின் உறுப்புரை 33(அ) பிரிவின்படி, நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் அரசாங்கக் கொள்கை அறிக்கையை சமர்ப்பிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அரசமைப்பின் உறுப்புரை 33 (ஆ) படி, ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் சம்பிரதாய அமர்வுகளுக்கு தலைமை தாங்குவதற்கு உரிமையுடையவராவார்.
இந்த அமர்வின் போது, அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வை மற்றும் வரவிருக்கும் முன்முயற்சிகள் பற்றிய விரிவான விளக்கத்தை, கொள்கை அறிக்கையின் மூலம் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கும், பொதுமக்களுக்கும் வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## நாடாளுமன்ற...

நேற்று நடைபெற்றது. அதிலேயே இந்த் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, கட்சியின் பேச்சாளர் யார் என்பது தொடர்பில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வின் பின்னர் தீர்மானிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார். (அ-எ-110-66)

## பொலிஸாரை...

சுமார் 6 பேர் கொண்ட இளைஞர்கள் குழு வயோதிபர் ஒருவரைப் பிடித்து வைத்து தலைக்கவசத்தால் தாக்குதல் நடத்த முயற்சித்ததுடன், வீதியில் சத்தமாக அநாகரிமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்துள்ளது. அப்போது அந்த வழியால் ஊர்காவற்றுறைக்கு விசாரணை ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் வாகனத்தை நிறுத்தியுள்ளனர். வீதியில் நின்ற இளைஞர்கள் குழு அந்த வாகனத்தை நோக்கியும் தவறான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்து வம்பிழுத்துள்ளனர்.
வாகனத்தில் இருந்து பொலிஸார் இறங்கியதும் அந்த இளைஞர் குழு, மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கைவிட்டுவிட்டு அந்தக் குழு ஓடித் தப்பியது. மோட்டார் சைக்கிளை மீட்ட பொலிஸார், வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் அதனை ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் வட்டுக்கோட்டைப்பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-26)

## கிணற்றில்...

கிணற்றில் தண்ணீர் அள்ளியபோது சிறுவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளான் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110-18)

## பொது...

என்பதை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள் அந்த நபரை மடக்கிப் பிடித்துள்ளனர். அதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.
இது தொடர்பில் அந்தப் பகுதி கமக்காரர் அமைப்புக்குத் தகவல் வழங்கியதை அடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்றதுடன், இது தொடர்பாக பொலிஸாருக்கும், சுகாதாரப் பிரிவினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.
சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அந்த நபரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் சென்றனர். மலர்ச்சாலையின் உரிமையாளர் சம்பவ இடத்துக்கு வர வேண்டும் என்று மக்கள் போராட்டம் மேற்கொண்டதால் அங்கு பதற்றமான நிலைமை காணப்பட்டது.
சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நடத்தப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்ததை அடுத்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (அ-எ-110)

## ஆபத்தை...

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இடதுசாரிகளுக்கு என ஒரு பண்பியல்வு இருக்கிறது. அவர்கள் தமக்கு ஏற்றவாறு சட்டங்களை மாற்றித் தமது ஆட்சியை தக்க வைத்துக்கொண்டிருப்பார்கள். அதை உணர்ந்து தமிழ் தரப்புகள் ஒற்றுமைப்படவேண்டும்.
வடக்கையும், கிழக்கையும் பறிகொடுத்துவிட்டு எம்மீது திணிக்கப்படும் தீர்வுகளை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படும். அதை உணராது செயற்பட்டால் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலையும் தமிழர் தரப்புப் பறிகொடுக்க நேரிடும். அதை உணர்ந்து தமிழர் தரப்புகள் ஒற்றுமைப்பட வேண்டும். இதை நாம் ஒரு அழைப்பாகக்கூட முன்வைக்கின்றோம். ஆசன மோதல்களை விட்டுத் தமிழ்த் தரப்புகள் ஒன்றிணையவேண்டும். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துவிட்டார்கள் என்று தமிழ் வாக்காளர்களை மலினப்படுத்த விரும்பவில்லை.
பொதுக்கட்டமைப்பின் உடைவுக்கு பொது அமைப்புகள்தான் பொறுப்பேற்க வேண்டும். (அ-எ-26-20-125)

## எம்.பிக்களுக்கு...

ஜனாதிபதிகளுக்குரிய கொடுப்பனவுகள், சலுகைகளை குறைப்பது தொடர்பாகத் தீர்மானிப்பதற்குக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் இந்த விடயத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.
உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சித்திரசிறி தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்த குழுவில் முன்னாள் மாவட்டச் செயலர் புலுமுல்ல, அமைச்சு செயலர் திசாநாயக்க ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (அ-எ-6)

## தமிழரசின்...

கூட்டம் வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவை சேனாதிராசா, சி.சிறீதரன், ச.குகதாசன், இரா.சாணக்கியன், எம்.ஏ.சுமந்திரன், த.கலையரசன், ப.சத்தியலிங்கம், சி.வீ.கே.சிவஞானம், துரைராஜசிங்கம், குலநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர். கட்சியின் தேசியப் பட்டியல் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் நீண்ட வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. இறுதியில் வன்னி மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வியடைந்த மருத்துவர் ப.சத்தியலிங்கத்துக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-எ-110-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 12 . 1960



மறைவு 16 . 11 . 2024

### திருமதி ஸ்ரீதரன் ரேவதி

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் சிறிது காலம் கனடாவில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவருமான ஸ்ரீதரன் ரேவதி அவர்கள் 16.11.2024 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பூலோகம் மங்கையற்கரசி (சரசு) அவர்களின் பாசமிகு மருமகளும் ஸ்ரீதரன் அவர்களின் மனைவியும் திவாகரன் (கனடா), திபோதனன் (கனடா) கோவிதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தனுஷ்யா (கனடா), துவாரகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், லீலாவதி (ஜேர்மனி), கனகரட்ணம் (கனடா), காலஞ்சென்ற மோகன், விஜயகுமார் (சுவிஸ்), ரங்கன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜெயசீலன் (அறிவாளன்-கனடா) அன்பழகி (கனடா), காலஞ்சென்ற அன்பரசி, தயாளன் (கனடா), அமுதா (கனடா), பாலசுப்ரமணியம் (ஜேர்மனி), பிரேமலதா (சுவிஸ்), ஜெயமதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கருணானந்தன் (கனடா), மலர்விழி (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீவேணி, ராஜராஜன் (கனடா) ஆகியோரின் சகலியும், அதியன், அதிரா, சதுர்திகன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புளியங்கூடல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

புளியங்கூடல் [illegible],
ஊர்காவற்துறை.

(CS 29273) V-1

கணவர் : 074 103 9977
கோவிதன் (மகன்) : 077 332 2707

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

4 பேர் கொண்ட குடும்பத்திற்கு கோண்டாவில், இருபாலை, கொக்குவில் பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
**077 605 1470**

## மணமகன் தேவை

1992, குருகுலம் (K), ஆசிரியர் - BSc பதிவுத்திருமணத்துடன் விவாகரத்தான மணமகளுக்கு தகுதியான மணமகன் தேவை.

(CR/43726) J-1

**074 089 6478**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 18 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
- தண்ணீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00 வரை

(CS/29272) J-1

**077 468 3354, 077 288 0152, 076 739 0413**

# மரண அறிவித்தல்



மண்ணில்
13 . 12 . 1959

விண்ணில்
16 . 11 . 2024

## இராசமலர் கெங்காதரன்

யாழ். ஏழாலையினைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசமலர் கெங்காதரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (16.11.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - திருப்பதி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கெங்காதரன் (ஓய்வுபெற்ற மண் பரிசோதகர், நீர்பாசன திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், சபீதன் (அவுஸ்திரேலியா), பிரதீபா (கணக்காளர்), சாமினி (வைத்தியர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், அச்சுதன் (விரிவுரையாளர் N.I.E ), உஷா (அவுஸ்திரேலியா), ரமேஷ் (பொறியியலாளர், R.D.A) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிலானி, ஆதீஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தங்கராஜா (லண்டன்), நித்தியராஜா (கனடா), ரதிகலா (லண்டன்), யசோதா (கனடா), ரகுராஜா (சட்டத்தரணி) வசந்தி (கணக்காளர்-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் புஸ்பராணி (கனடா), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

23, M.S வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
074 087 8010

(CS/56695) J-1

**HIKVISION** DEALER PARTNER PLATINUM

NALIN Information Technologies (Pvt) Ltd — Computers of the North





அனைத்து Camera Package களும் இலவசமாகப் பொருத்திக் கொடுக்கப்படும்.

எங்கும் இல்லாத விலைக் கழிவில்...
இச் சலுகை 30.11.2024 வரைக்கும்

| Item | Qty |
|---|---|
| HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE16D0T-EXLPF (02 YEARS WARRANTY) | 4 |
| 3U 400MM DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 500GB HDD (01 YEAR WARRANTY) | 1 |
| HITECH POWER PACK HT-212HQ | 4 |
| METAL BNC CONNECTOR | 8 |
| 3C 2V COXIAL CABLE 100M | 1 |

**Rs. 45000.00**

| Item | Qty |
|---|---|
| HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE16D0T-EXLPF (02 YEARS WARRANTY) | 8 |
| 3U 400MM DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 500GB HDD (01 YEAR WARRANTY) | 1 |
| HITECH POWER PACK HT-212HQ | 8 |
| METAL BNC CONNECTOR | 16 |
| 3C 2V COXIAL CABLE 100M | 1 |

**Rs. 71000.00**

| Item | Qty |
|---|---|
| HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE10DF0T-PFS (02 YEARS WARRANTY) | 4 |
| 3U 400MM DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 500GB HDD (01 YEAR WARRANTY) | 1 |
| HITECH POWER PACK HT-212HQ | 4 |
| METAL BNC CONNECTOR | 8 |
| 3C 2V COXIAL CABLE 100M | 1 |

**Rs. 51500.00**

| Item | Qty |
|---|---|
| HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE10DF0T-PFS (02 YEARS WARRANTY) | 8 |
| 3U 400MM DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 1TB SURVEILLANCE HARDDISK (01 YEAR WARRANTY) | 1 |
| HITECH POWER PACK HT-212HQ | 8 |
| METAL BNC CONNECTOR | 16 |
| 3C 2V COXIAL CABLE 100M | 1 |

**Rs. 87700.00**

| Item | Qty |
|---|---|
| HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE10DF3T-PF (02 YEARS WARRANTY) | 4 |
| 3U 400MM DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 500GB HDD (01 YEAR WARRANTY) | 1 |
| HITECH POWER PACK HT-212HQ | 4 |
| METAL BNC CONNECTOR | 8 |
| 3C 2V COXIAL CABLE 100M | 1 |

**Rs. 59000.00**

| Item | Qty |
|---|---|
| HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE10DF3T-PFS (02 YEARS WARRANTY) | 8 |
| 3U 400MM DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 2TB SURVEILLANCE HARDDISK (01 YEAR WARRANTY) | 1 |
| HITECH POWER PACK HT-212HQ | 8 |
| METAL BNC CONNECTOR | 16 |
| 3C 2V COXIAL CABLE 100M | 1 |

**Rs. 128000.00**

Follow us: facebook/nalin it www.nalinit.lk nalin@nit.lk

| | | |
|---|---|---|
| JAFFNA | 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. | 077 766 7975 / 021 222 1121 |
| KILINOCHCHI | No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi. | 076 359 7610 / 021 228 5550 |
| MANNAR | No.208A, Hospital Road, Mannar. | 076 359 4368 / 023 222 2500 |
| NALIN IT EXCLUSIVE | No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC) | 076 359 4359 / 021 221 0404 |

# மரண அறிவித்தல்



மண்ணில்
16 . 07 . 1934

விண்ணில்
16 . 11 . 2024

## அமரர். ஞானம் இரத்தினம்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானம் இரத்தினம் நேற்றுமுன்தினம் (16.11.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-பொன்னம்மா தம்பதியின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா-கண்ணம்மா தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசையா, குணரத்தினம், தங்கம்மா, அன்னம்மா, சீவரத்தினம், இரத்தினம், செல்வராசா ஆகியோரின் சகோதரியும் கலாநிதி (ஓய்வுநிலை உபஅதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயக்குமார் (கொழும்பு), சாந்தகுமார் (லண்டன்), சிவநிதி (கொழும்பு), கருணசீலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரேசன், வசந்திதேவி, வாசுகி, ரவீந்திரன் (மாருதி மணி எக்சேஞ்) தர்மஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் விபீசாந், பிரசாந் (பவன்), தயானந்தி, நிரோசானந், நிருசங்கர், காயத்திரி, வர்ஷா, ருக்ஷி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 634 8948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.